## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

**அசல் வழக்கு எண். 26 /2019**

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் நாள் திங்கள் கிழமை என்பவரது சாட்சியாகிய மோகன்தாஸ் இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. P. கனிமொழி, B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி தரங்கம்பாடி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 21.11.2022

பெயர் : மோகன்தாஸ் தந்தை/கணவர் பெயர்: முத்தையன்

கிராமம் : வேலூர் தாலுக்கா:

சாதி : சமயம்:

தொழில்: வயது:66

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

28.08.1995 ல் தாவா சொத்தை வசந்தி என்பவர் பெயருக்கு நான் கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். கிரய தொகையாக ரூ.2500/– பெற்றுக்கொண்டேன். வசந்தி என்பவர் எனது அண்ணன் மனைவி ஆவார். அந்த கிரய பத்திரம் வா.சா.ஆ 1 ஆகும். கிரயம் செய்து கொடுத்த காலத்தில் அந்த சொத்திற்கு கிரய மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. உறவினர் என்பதால் ரூ.2500 க்கு கொடுத்தேன். வா.சா.ஆ 1ல் எனக்கு பூர்விகமாக கிடைத்த சொத்து என்று எழுதி கொடுத்துள்ளேன். வழக்குரையில் தாவா சொத்து பாகப்பிரிவினை மூலம் கிடைத்ததாக கூறியுள்ளேன். எனக்கும் எனது அண்ணனுக்கும் எழுத்து மூலமாக பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது, எந்த தேதியில் ஏற்பட்டது என்பது நினைவில் இல்லை. வழக்குரையில் தாவா சொத்து எனக்கு எந்த தேதியில் கிடைத்தது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு நினைவில் இல்லை. நான் கூறும் பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் தாவா சொத்து எனக்கு கிடைத்ததா என்பதை கண்டுபிடிக்க இயலும் என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரம் பதிவான பத்திரம். பதிவான பாகப்பிரிவினை பத்திரம் மூலம் எனக்கு சொத்து கிடைத்ததாக

வா.சா.ஆ1ல் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பாகப்பிரிவினை பத்திரம் இருந்திருந்தால் நான் வா.சா.ஆ1ன் சொல்லியிருப்பேன் என்றாலும் அப்படி ஒரு பத்திரம் இல்லாததால் தான் வா.சா.ஆ1ல் கூறவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. வா.சா.ஆ1 மூலம் வசந்திக்கு கிரயம் கொடுத்த சொத்தை மீண்டும் அவரிடம் இருந்து கிரயம் பெற்றேன். மீண்டும் அந்த தாவா சொத்தை ரூ.2800 கொடுத்து வாங்கினேன். பதிவாளர் முன்பு பணத்தை கொடுத்தேன். அப்போது அந்த சொத்தின் சந்தை மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. எவ்வளவு ரூபாய்க்கு ஸ்டேம்ப் வாங்கினேன் என்று நினைவில் இல்லை. வா.சா.ஆ1 மற்றும் வா.சா.ஆ2 ஆவணங்களுக்கு எனது சகோதரரான தங்கராசு உதவி செய்தார் . இந்த வழக்கு நடத்த தங்கராசுதான் உதவி செய்தார். 13.07.2016 ல் இவ்வழக்கு பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் தங்கராசுக்கு அறிவிப்பு அனுப்பினார். அது வா.சா.ஆ4 ஆகும். வா.சா.ஆ4 ஆவணத்தை எனது அண்ணன் தங்கராசு என்னிடம் கொடுத்தார். 2016ம் ஆண்டு தாவா சொத்தில் உள்ள மூங்கில் கழியை நாங்கள் வெட்டினோம். எனது அண்ணன் வெட்டினார். தாவா சொத்தானது பிரதிவாதிக்கு உரிமையானது என்றும், அதில் உள்ள முங்கில் கழியை வெட்டக்கூடாது என்றும் கூறி பிரதிவாதி தங்கராசுக்கு அறிவிப்பு அனுப்பினார். தங்கராசுக்கு அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு யார் கொடுத்தார் என்றால் தங்கராசு தான் கொடுத்தார். பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.

தாவா சொத்தை நான் கிரயம் வாங்கியதாக பதில் அறிவிப்பில் நான் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ4 ஆன அறிவிப்பு நான் தான் கொடுத்தேன் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ1 மற்றும் வா.சா.ஆ2 ஆவணத்தை நானும் எனது சகோதரர் தங்கராசுவும் சேர்ந்து ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தில் எந்த நிலையில் உள்ளது என்றால் காளி மனையாக உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கே முத்துகுமாரசாமி சொத்து உள்ளது. அது வேறு புல எண்ணில் உள்ளது. தாவா சொத்திற்கு மேற்கே ஜானகி அம்மாள் சொத்து உள்ளது. அது தாவா புல எண்ணிலேயே உள்ளது. தாவா சொத்திற்கு தென்புறம் ஜானகி அம்மாள் சொத்து உள்ளது. அது தாவா புல எண்ணிலேய உள்ளது. தாவா

சொத்திற்கு வடக்கே, வசந்தி, ராமாமிர்தம், சந்திரசேகர் பெத்தகுட்டி முதலியார் இவர்கள் சொத்து உள்ளது. வடக்கே உள்ள சொத்துக்கள் வேறு புல எண்ணில் உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் தற்போது என்னுடைய சொத்து எதுவும் இல்லை. இந்த தாவா சொத்திற்கு அருகில் ஒரு சந்து உள்ளது. அது மூலமாக தான் வழக்கு சொத்திற்கு செல்வோம். மேற்படி விபரத்தை வழக்குரையிலயோ, பதில் அறிவிப்பிலோ வா.சா.ஆ 2 ஆவணத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் நீள, அகல அளவை கூறியுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி எவ்வளவு முங்கில் கழியை வெட்டினார் என்றால் சுமார் 400 கழிகளை வெட்டினார். முங்கில் கழிகள் 15, 16 வருடத்திய மூங்கில் குத்து. ஜானகி அம்மாளின் பேரன் இந்த வழக்கின் பிரதிவாதி சரவணன் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ல் தாவா சொத்தில் வீடு, மரம் இல்லை என்றும் காளி மனை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சாஆ 2 ல் காளி மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆனால் ஆவணத்திற்கு மாறாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வடக்காலும், மேற்காலும் உள்ள ஜானகி அம்மாள் சொத்தில் முங்கில் குத்துகள் இருந்தன என்றால் சரிதான் ஆனால் எத்தனை மூங்கில் குத்துகள் இருந்தன என்று தெரியாது. எனக்கு தாவா சொத்து பற்றி எதுவும் தெரியாது என்றாலும், தங்கராசுவும் நானும் சேர்ந்து பிரதிவாதி சொத்தை அபரகரிக்க வேண்டும் என்று பொய்யாக ஆவணங்கள் தயாரித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சாஆ 1 மற்றும் வா.சா.ஆ 2 ல் ஆவணங்களில் உள்ள நான்கெல்லைகள் தவறாகவும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு என் பெயரில் தனி பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அது போல் தனிபட்டா எதுவும் கிடையாது என்றாலும் வா.சாஆ 3 ஆன பட்டா மோசடியாக வாங்கப்பட்டுள்ளது என்றாலும் அந்த ஆவணம் உண்மையானது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 ஆவணத்தில் சுப்பராயலு படையாச்சி மனைவி ஜானகி என உள்ளது என்றால் சரிதான். சுப்பராயலு , ஜானகி ஆகியோர்களின் மகன் கலியபெருமாள் என்றால் சரிதான். கலியபெருமாளின் மகன் தான் இவ்வழக்கின் பிரதிவாதி சரவணன் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக எனது குடும்பத்தில் எந்த பாகப்பிரிவினையும் இல்லை என்றாலும், தாவா சொத்து எனக்கும் எனது குடும்பத்தியத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை

என்று சொன்னாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்து உண்மையான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.